# மேலதிக சோதனைகள் - இதன் அர்த்தம் என்ன?

**மேலதிக மார்பக 'எக்ஸ்-ரே' படங்கள் எடுப்பதற்காக மீண்டும் வருமாறு நீங்கள் கேட்கப்பட்டுள்ளீர்கள். மேலதிக சோதனைகளுக்காக மீண்டும் வருமாறு கேட்கப்பட்டுள்ள பெண்களில் பெரும்பாலானோருக்கு சோதனை முடிவுகள் சாதாரணமானவையாகவே இருக்கின்றன (மார்பகப் புற்று நோய் இல்லை என்ற முடிவு).**

## மீண்டும் வருமாறு என்னை ஏன் கேட்டிருக்கிறார்கள்?

மேலதிக மார்பக 'எக்ஸ்-ரே' படங்கள் எடுப்பதற்காக மீண்டும் வருமாறு கேட்கப்படுவது புதிதல்ல. மீண்டும் வருமாறு கேட்கப்படுவதற்கான காரணங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

### திசு அடர்த்தி (Density)

'மேமொக்ராம்' என்பது உங்களுடைய மார்பகத் திசுவின் 'எக்ஸ்-ரே' படமாகும். மார்பகத் திசுக்களின் பரவல் சமமாக இல்லாதபோது அது ஒரு அசாதாரணமானதாகத் தோன்றும். திசுக்கள் அடர்த்தியாகக் காணப்படும் ஒரு பகுதி சாதாரணமான சுரப்பிகள் சம்பந்தப்பட்டதுதான் என்று அடையாளம் காண மேலதிக 'எக்ஸ்-ரே' படங்களால் உதவ இயலும்.

### நீர்க்கட்டிகள் (Cysts)

தெளிவான விளிம்புகளைக் கொண்ட வட்ட வடிவிலுள்ள ஒரு அடர்த்தியான பகுதி பொதுவாக ஒரு 'சாந்தமான' ('benign' (புற்று அல்லாத)) நீர்க்கட்டியாகவே இருக்கும். விளிம்புகள் தெளிவாகத் தெரியவில்லை என்றால் மேலதிகச் சோதனைகள் தேவைப்படலாம்.

### படிமானம் (Calcification)

படிந்துபோன சுண்ணாம்பு (calcium) துணுக்குகள் சில பெண்களுடைய மார்பக 'எக்ஸ்-ரே'-க்களில் காணப்படும்; இந்த சுண்ணாம்புப் படிமானங்கள் பொதுவாக சாதாரணமானவையே. இருந்தாலும், ஒழுங்குமுறை இல்லாத படிமானக் கும்பல்கள் புற்று நோயின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கக்கூடும், மற்றும் இவற்றிற்கான மேலதிக சோதனைகள் தேவைப்படும்.

### தழும்புகள் (Scarring)

மார்பகத்தில் இதற்கு முன்பு செய்த அறுவைசிகிச்சையின் காரணமாகத் தழும்பு ஒன்று ஏற்பட்டிருக்கக்கூடும். 'எக்ஸ்-ரே' படங்களை ஆய்வு செய்வது தழும்பேறிய திசுக்களின் காரணமாகக் கடினமாக இருக்கும், ஆகவே இன்னும் சில மேலதிக சோதனைகள் உங்களுக்குத் தேவைப்படலாம்.

### தோல் அடையாளக் குறிகள் (Skin markers)

'எக்ஸ்-ரே' படங்களை ஆய்வு செய்வதில் நிபுணர்களுக்கு உதவுவதற்காக, 'எக்ஸ்-ரே' படத்தில் மார்பகத்திலுள்ள தழும்பு, மச்சம் அல்லது மரு அல்லது நோயறிகுறி உள்ள இடங்களின் மீது 'தோல் அடையாளக் குறிகள்' (skin markers) வைக்கப்படலாம்.

## மேலதிக மார்பக 'எக்ஸ்-ரே' படங்களின் முடிவுகளை நான் எப்படித் தெரிந்துகொள்வது?

உங்களுடைய 'எக்ஸ்-ரே' சோதனையின் முடிவுகளை உங்களுக்குத் தெரிவிக்க 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' உங்களைத் தொலைபேசியில் அழைக்கும். கூடுதல் சோதனைகள் தேவைப்படலாம், மற்றும் இந்தக் கூடுதல் சோதனைகள் மார்பக 'எக்ஸ்-ரே'-யின் தோற்றத்தைப் பொறுத்து அமையும். நீங்கள் ஏன் மீண்டும் வருமாறு கேட்கப்பட்டுள்ளீர்கள் என்பதை விளங்கிக்கொள்வதற்காக, எத்தனை கேள்விகளை வேண்டுமானாலும் நீங்கள் கேட்கலாம்.

கூடுதல் சோதனைகள் உங்களுக்குத் தேவைப்பட்டால், மேலதிக மார்பக சோதனைகளுக்காக 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' மார்பகச் சோதனை மதிப்பீட்டு மையத்தில் சந்திப்புவேளை ஒன்று உங்களுக்குத் தரப்படும். இந்த சேவை இலவசம், மற்றும் கிராமியப் பகுதிப் பெண்கள் 'நோயாளர் பயண ஒத்தாசைத் திட்ட'(Patient Assisted Travel Scheme - PATS)த்தின் கீழ் உதவி பெறுவதற்கானத் தகுதி பெறக்கூடும். மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து உங்களுடைய ஜி.பி-யைப் பாருங்கள்.

## முந்தைய 'எக்ஸ்-ரே' படங்கள்

நீங்கள் பெறும் முந்தைய மார்பக **'எக்ஸ்-ரே'** படங்கள் மற்றும் மார்பக 'அல்ட்ரா சவுண்ட்' படங்கள் அனைத்தையும் வைத்திருங்கள். உங்களுடைய தற்போதைய 'எக்ஸ்-ரே' படத்தில் இருக்கக்கூடிய கவலை ஏற்படுத்தும் பகுதி ஒன்றைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை, அது நீண்ட நாட்களாக இருக்கும் ஒன்று என்பதைக் காண்பிக்க முந்தைய 'எக்ஸ்-ரே' படங்கள் நிபுணருக்கு உதவும்.

## தேவைப்படக்கூடிய வேறு மேலதிக சோதனைகள் யாவை?

மார்பக **'எக்ஸ்-ரே'** படங்களால் கண்டுபிடிக்கப்படும் பெரும்பாலான மாற்றங்கள் தொட்டுப்பார்த்துத் தெரிந்துகொள்ள இயலாத அளவிற்குச் சிறியவையாக இருக்கும், ஆகவே இவற்றிற்கான மேலதிக சோதனைகள் தேவைப்படும்.

### மேலதிக ஆய்விற்கான நோயறிவு 'எக்ஸ்-ரே' படங்கள் (Diagnostic further view mammography)

மருத்துவ ரீதியாகச் சோதிக்கப்படவேண்டிய இடத்தைக் குறிப்பாய்க் கருத்தில் கொள்ளும் 'எக்ஸ்-ரே' படங்கள் இதில் உள்ளடங்கும்.

### 'மார்பகப்புற்று எக்ஸ்-ரே பகுப்பாய்வு' / 'எக்ஸ்-ரே' சோதனை (Breast Tomosynthesis / 3D mammography)

'முப்பரிமாண எக்ஸ்-ரே ' (three-dimensional mammography) (இது டிஜிட்டல் மார்பக 'டோமோஸின்தஸிஸ்'என்றும் அழைக்கப்படுகிறது), பிரத்தியேகமான கணினி மென்பொருளைப் பயன்படுத்தி 'எக்ஸ்-ரே'-க்கள் ('மேமொக்ராம்'கள்) மூலம் வெவ்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட படங்களைக் கொண்டு மார்பகத்தின் 3D தோற்றம் உருவாக்கப்படுகின்றது. பொதுவாக எடுக்கப்படும் 'மேமொக்ராம்'கள் மார்பகத்தின் இரு-பரிமாணத் (2D) தோற்றத்தையே உருவாக்குகின்றது.

### மருத்துவரீதி மார்பகப் பரிசோதனை

உங்களுடைய 'எக்ஸ்-ரே' படங்களை நிபுணர் ஒருவர் ஆய்வு செய்த பிறகு, மருத்துவரீதியான பரிசோதனை ஒன்று உங்களுக்குத் தேவைப்பட்டால், பெண் மார்பக மருத்துவர் ஒருவர் உங்களுடைய மார்பகங்களை முற்றிலுமாகச் சோதித்து உங்களுடைய மருத்துவ வரலாற்றைப் பற்றி உங்களுடன் பேசுவார்.

### மார்பக 'அல்ட்ரா சவுண்ட்'

மார்பகத் திசுக்களை இன்னும் தெளிவாகக் காண்பிப்பதற்காக ஒலி அலைகளைப் (கதிர்வீச்சை அல்ல) பயன்படுத்தும் சோதனையாகும் இது. மார்பகத்தின் மீது களிம்பு (ஜெல்) ஒன்றைப் பூசி, ஆய்வுகோல் (probe) ஒன்று தோல் மீது வைத்து அழுத்தப்படும்.

### நிழலுருப்பட உதவியுடன் செய்யப்படும் திசுச் சோதனை (Image guided biopsy)

மார்பகத் திசுச் சோதனையில், மார்பகத்திற்குள் ஊசி ஒன்று செலுத்தப்பட்டு மருத்துவப் பிரச்சினை இருப்பதாகக் கருதப்படும் இடத்திலிருந்து, 'மைக்ரொஸ்கோப்'-இன் கீழ் சோதிக்கப்படுவதற்காக, மாதிரித் திசு எடுக்கப்படும்.

சரியான இடத்திலிருந்து ஊசி மூலம் மாதிரி எடுக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த, இந்த சோதனையைச் செய்யும் 'எக்ஸ்-ரே' நிபுணர் அல்ட்ரா சவுண்ட் அல்லது கதிர்வீச்சு வழிகாட்டலைப் பயன்படுத்துவார். குறிப்பிட்ட இடத்தை மட்டும் மரத்துப்போகச் செய்யும் மருந்து பயன்படுத்தப்படும். இந்தத் திசுவை நோய்க்குறி நிபுணர் (pathologist) ஒருவர் சோதிப்பார், மற்றும் முடிவுகள் பொதுவாக 24 மணி நேரத்திற்குப் பிறகு கிடைக்கும்.

அடையாளக்குறி (Marker clip)

சில வேளைகளில் 'எக்ஸ்-ரே' உதவியோடு செய்யப்படும் திசுச் சோதனை செய்யப்பட்ட பிறகு மாதிரி எடுக்கப்பட்ட இடத்தில் சிறு உலோக 'க்ளிப்' ஒன்றைப் பயன்படுத்தி அடையாளக் குறி ஒன்று ஏற்படுத்தப்படும்.

## அனைத்துப் புற்றுக்களையும் இந்தச் சோதனைகளால் கண்டுபிடிக்க இயலுமா?

பெரும்பான்மையான மார்பகப் புற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுவிடும், ஆனால் எல்லாப் புற்றுக்களும் கண்டுபிடிக்கப்படும் உத்திரவாதத்தைக் கொடுக்கக்கூடிய சோதனை எதுவும் இல்லை. பரிந்துரைகள் ஏதும் அளிக்கப்பட்டால், அனைத்துப் பெண்களும் அவற்றைப் பின்பற்றவேண்டியது முக்கியம்.

## மதிப்பீட்டிற்கான சந்திப்புவேளையின்போது

இவை 'பல்வகை சிறப்பு மருத்துவ மையங்க'(multidisciplinary Specialist Centres)ளாகும். இங்கு 'எக்ஸ்-ரே' நிபுணர்கள், நோயறிகுறி ஆய்வாளர்கள், செவிலியர்கள், 'எக்ஸ்-ரே' படப்பிடிப்பாளர்கள், மார்பக மருத்துவர்கள் மற்றும் அறுவைசிகிச்சையாளர்கள் ஆகியோரைக் கொண்ட எமது அணியினரது நிபுணத்துவ மதிப்பீட்டையும், சிகிச்சையையும் நீங்கள் பெறுவீர்கள்.

அனைத்து சந்திப்புவேளைகளும் காலை நேரங்களில் ஏற்பாடு செய்யப்படும். உங்களுடைய முழு மதிப்பீட்டிற்காக நீங்கள் **8 மணித்தியாலங்கள் வரைக்குமான** நேரத்தை ஒதுக்கவேண்டி இருக்கலாம். உங்களுடைய வேலைத்தல முதலாளிக்காக மருத்துவச் சான்று ஒன்று உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து சிகிச்சைநிலையப் பணியாளர்களிடம் சொல்லுங்கள்.

வாகனத் தரிப்புக் கட்டணத்திற்கான பணம் கொண்டுவரவும். அல்லது, பொதுப் போக்குவரத்துத் தெரிவுகளைப் பற்றித் தெரிந்துகொள்ள 13 62 13-இல் 'ட்ரான்ஸ்-பெர்த்'- ஐ அழையுங்கள்.

## முடிவுகளை உங்களுடைய ஜி.பி-க்கு அனுப்புதல்

ஒரு ஜி.பி-யை நீங்கள் பெயர் குறிப்பிட்டிருந்தால் (அப்படிச் செய்யுமாறு உங்களை ஊக்குவிக்கிறோம்), உங்களுடைய அடுத்த சோதனைகளுக்கான சந்திப்புவேளைகளைப் பற்றி 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' அவருக்குத் தெரிவிக்கும். உங்களுடைய மதிப்பீட்டு வருகையின் முடிவுகளும் உங்களுடைய ஜி.பி-க்குத் தெரிவிக்கப்படும்.

## BreastScreen WA 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA'

தொலைபேசி (08) 9323 6700
தொலை நகல் (08) 9323 6799
மின்னஞ்சல் breastscreenwa@health.wa.gov.au
தேசியத் தொடர்-மாற்று சேவை (National Relay Service) www.relayservice.gov.au
'மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை' (TIS) 13 14 50

## 'ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA' மதிப்பீட்டு மையங்கள்'

### Royal Perth Hospital (RPH) Breast Assessment Clinic

Level 3, North Block. Wellington Street, Perth, 6000




### Sir Charles Gairdner Hospital

G Block, 1st floor, Hospital Avenue, Nedlands.



‘ப்ரெஸ்ட்ஸ்க்ரீன் WA’ மதிப்பீட்டு மையங்கள்’

## Bunbury South West Health Campus
Corner of Bussell Highway and Robertson Drive




## Fiona Stanley Hospital
**Level 1 Main Hospital, 102-118 Murdoch Drive, Murdoch Tel: (08) 6152 4125**




## Joondalup 57 Joondalup Drive, Joondalup




BreastScreen AUSTRALIA
A joint Australian, State and Territory Government Program

BEAT BREAST CANCER HAVE A FREE X-RAY RING: 13 20 50

LIKE US ON facebook

**www.breastscreen.health.wa.gov.au**

DEC 2022